

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.07.2023) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார் ஆகியோர் சந்தித்து, பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறையின் மேம்பாடுகள் குறித்து ரோம், பாரீஸ், பார்ஸிலோனா நகரங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட விபரங்கள் மற்றும் புதிய திட்டப் பரிந்துரைகள் குறித்த அறிக்கையினை வழங்கினார்கள். உடன் கூடுதல் தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என். மகேசன், செயற்பொறியாளர்கள் ப. விஜய் அரவிந்த் மற்றும் ரா.ஆ.பிரபாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நேற்று (13.07.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நீர்வளத்துறையின் சென்னை மண்டலத்திற்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத்துறை கூடுதல் செயலாளர் திருமதி எஸ்.மலர்விழி, சிறப்பு செயலாளர் கே.முருகன், முதன்மை தலைமைப் பொறியாளர் அ.முத்தையா, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.அசோகன், திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் கு.பொன்ராஜ் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.20 கோடியில் நடைபெறவுள்ள

# சென்னை - புறநகர்ப் பகுதிகளில் பருவ மழை முன்னேற்பாடுகள்!

## அதிகாரிகளுடன் அமைச்சர் துரைமுருகன் ஆய்வு!

சென்னை, ஜூலை 14 -

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் நீர்வளத்துறையின் கீழ் இயங்கும் சென்னை மண்டலத்தைச் சார்ந்த பணிகள் குறித்து அனைத்து நீர்வளத்துறை அலுவலர்களுடன் நேற்று (13-07-.2023) ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து அரசினால் ஒதுக்கப்பட்ட ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் நடைபெறவுள்ள பணிகள் குறித்து விவாதித்தார். மேலும் இப்பணிகள் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன் 15.09.2023 முன்பாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அனைத்து கால்வாய்களையும் தூர்வாரி, ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டு நீர்தங்குதடையின்றி செல்ல வழிவகை செய்ய வேண்டும் என உத்தரவிட்டார்.

மேலும், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டப் பணிகள், நீர்வள, நிலவள திட்டப் பணிகள் ஆகியவற்றினை திட்டமிடப்பட்ட காலத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

மேலும் கடந்த ஆண்டு நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.434.00 கோடி அளவில் நடைபெற்று வரும் போரூர் ஏரி உபரிநீர் கால்வாய், அடையாறு ஆற்றினை அகலப்படுத்தும் பணி, கொசஸ்தலையாற்றின் வெள்ளக்கரை அமைக்கும் பணி, சென்னை மாநகரில் அமைந்துள்ள முக்கிய ஏரிகளில் நீர் ஒழுங்கிகள் அமைக்கும் பணிகள், பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி, செம்மஞ்சேரி பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் விவாதித்தார்.

இந்த ஆண்டு சென்னை மற்றும் புறநகர் பகுதியினைச் சார்ந்த கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் மேம்படுத்தும் பணி, கொளப்பாக்கம், கெருகம்பாக்கம், மணப்பாக்கம் பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மாதவரம் ரெட்டை ஏரியில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். சந்தீப் சக்சேனா, அரசு கூடுதல் செயலாளர் திருமதி. எஸ். மலர்விழி, நீர்வளத்துறை சிறப்புச் செயலாளர் கா.முருகன், முதன்மை தலைமைப் பொறியாளர் ஏ.முத்தையா, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.அசோகன், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் ஜி.பொன்ராஜ், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு காங்கிரஸ் மூத்த தலைவர்

# சு.திருநாவுக்கரசர் எம்.பி. பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!

சென்னை, ஜீலை 14 -



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான சு.திருநாவுக்கரசர் அவர்களது 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அவரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



நேற்று (13.07.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரின் இணைய தளத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். உடன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்து மற்றும் சாலைபாதுகாப்பு ஆணையர் அ.சண்முக சுந்தரம் மற்றும் தேசிய தகவல் மையத்தின் முதுநிலை இயக்குநர் ஈஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.

### மாதந்தோறும் ரூ.1,000 வழங்குவதற்கான விண்ணப்பங்கள்

# ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ முகாம்கள்!

## சென்னையில் 3,200 இடங்களில் நடைபெறுகின்றது!

சென்னை, ஜூலை.14-

சென்னையில் மகளிர் உரிமைத் தொகை முகாம் ஜூலை 24-ஆம் தேதி முதல் தொடங்கும் என்று மேயர் பிரியா ராஜன் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் செயல்படுத்தப்படவிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான முகாம் பற்றி சென்னை மேயர் பிரியா ராஜன் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், சென்னையில் மட்டும் 3,200 இடங்களில் மகளிர் உரிமைத் தொகைக்கான முகாம்கள் நடைபெற உள்ளது. சென்னையில் உள்ள 1,415 ரேஷன் கடைகளில் தன்னார்வலர்களை நியமித்து விண்ணப்பங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, சென்னையில் மகளிர் உரிமைத் தொகை முகாம் ஜூலை 24-ஆம் தேதி முதல் தொடங்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலின்போது, தி.மு.க. அளித்த வாக்குறுதிகளில் ஒன்றான, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் செயல்படுத்தவிருப்பதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

மகளிர் உரிமைத் தொகை பெறும் மகளிருக்கான தகுதிகள், வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வகுத்து வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், நியாய விலைக்கடைகளில் அதற்கான முகாம்கள் நடத்தப்படும் என்றும், சிறப்பு முகாம்கள் ஜூலை 24-ஆம் தேதி தொடங்கும் என்றும் மேயர் பிரியா ராஜன் அறிவித்துள்ளார்.


